ஆகஸ்ட் 12-18

**பாடம் 8**

# அடிமை மாறி சுதந்தரவாளியாதல்



அடிமைகளை போல வாழாமலும் செயல்படாமலும், தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக அதன் சகல உரிமைகளோடும் சிலாக்கியங்களோடும் வாழும்படி கலாத்தியரிடம் கூறுகிறார் பவுல். வாலிபரான லூத்தருக்கு இந்தச் சத்தியம்தான் மிகவும் தேவையாக இருந்தது. பாவ உணர்வுகள் தீவிரம் அடையவே தன்னுடைய சுய கிரியைகளால் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ள அந்த வாலிபர் பிரயாசப்பட்டார். உபவாசம், கசையடி, கண்விழிப்பு என தன்னுடைய தீய இயல்புகளை அடக்குவதற்கு வாழ்க்கையை மிகவும் கடினமாக்கினார்; ஆனாலும் சந்தியாச வாழ்க்கையானது இவற்றிலிருந்து விடுதலை தரவில்லை. தேவனுக்குமுன் தன்னை அங்கீகரிப்பதற்கு தேவையான பரிசுத்த இருதயத்தைப் பெறுவதற்கு எந்தவொரு தியாகத்தையும் அவர் செய்யாமல் இருக்கவில்லை. சந்தியாச முறைமையின் விதிகளை இம்மியளவும் பிசகாமல் கைக்கொண்ட பக்திமிக்க ஒரு துறவியாக இருந்தார். "எந்தத் துறவியாவது சந்நியாச கிரியைகளால் பரலோகத்தை அடையமுடியுமானால் அந்தத் தகுதியை நிச்சயம் நான் அடைந்திருப்பேன்" என்று அவரே பின்னாளில் சொல்லியிருந்தார். ஆனால், லூத்தர் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை.

கலாத்தியர் நிருபம் வெளிப்படுத்துகிறதுபோல, கிறிஸ்துவில்தான் இரட்சிப்பு உண்டு என்கிற சத்தியத்தை லூத்தர் புரிந்துகொள்ள தொடங்கியபிறகுதான் மெய்யான ஆவிக்குரிய விடுதலையை அவர் கண்டுகொண்டார்; தன் ஆத்துமாவில் நம்பிக்கையையும் அடைந்தார். அவருடைய அந்த மாற்றமானது உலகையே மாற்றக்கூடிய ஒன்றாக இருந்தது.

2017, ஆகஸ்ட் 19 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

**மனன வசனம்**

**ஆகையால், இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய். கலா 4:7.**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 3:26-4:20; ரோமர் 6:1-11; எபி 2:14-18; எபி 4:14,15; ரோமர் 9:4,5.**

ஆகஸ்ட் 12 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## கிறிஸ்துவில் நமது நிலை (கலா 3:26–29)

***கலா 3:25 ஐ மனதில் வைத்து கலா 3:26 ஐ வாசியுங்கள். இப்போது இயேசு நம்மை மீட்டுக் கொண்ட நிலையில், நியாயப்பிரமாணத்திற்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன?***

கலா 3:25,26 வசனங்கள் இரண்டும் நேரடித் தொடர்பு உடையவை. எஜமானின் மகன் பெரியவனாகும்வரைதான் பைடகாகோஸின் கண்காணிப்பில் இருப்பான். கிறிஸ்துவில் விசுவாசம்வைப்போர் இனியும் குழந்தைகளல்லர் என்பதால், நியாயப்பிரமாணத்தோடு அவர்களுக்குள்ள உறவும் மாறுகிறது; இப்போது அவர்கள் தேவனுக்குள் ‘புத்திரராக’ இருக்கிறார்கள்.

‘புத்திரர்’ என்று ஆண்களைமட்டும் பவுல் குறிப்பிடவில்லை; பெண்களையும் சேர்த்துத்தான் பேசுகிறார். கலா 3:28. ‘பிள்ளைகள்’ என்று சொல்லாமல், ‘புத்திரர்’ என்று அவர் சொல்வதற்குக் காரணமுண்டு. குடும்பத்தின் சுதந்தரம் ஆண் பிள்ளைகளுக்குத்தான் வழங்கப்பட்டது; மேலும், பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் புத்திரரைச் சுட்டிக்காட்டவே ‘தேவனுடைய புத்திரர்’ எனும் சொற்றொடர் விசேஷமாகப் பயன்படுத்தப்பட்டது. உபா 14:1; ஓசியா 11:1. தேவனோடு இஸ்ரவேலர் மாத்திரமே பிரத்தியேகமாக அனுபவித்துவந்த விசேஷித்த உறவை இப்போது புறஜாதியாரும் கிறிஸ்துவுக்குள் அனுபவிக்க முடிந்தது.

***ஞானஸ்நானம் ஏன் முக்கியமானது? கலா 3:27,28; ரோமர் 6:1-11; 1 பேதுரு 3:21.***

---

தான் சொல்வதின் அர்த்தம் நன்குபுரியும்படி, வச 27 இல் ‘ஏனெனில்’ என்று ஆரம்பிக்கிறார் பவுல். கிறிஸ்துவோடு நம் வாழ்க்கையை முற்றிலும் இணைக்கும் ஒரு தீர்மானம்தான் ஞானஸ்நானம் என்கிறார். கிறிஸ்துவின் மரணத்தோடும் உயிர்த்தெழுதலோடும் நாம் ஐக்கியமாவதற்கு ஓர் அடையாள மாக ஞானஸ்நானம் இருக்கிறது. ரோமர் 6. கலாத்தியரில், ‘ஞானஸ்நானமானது கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளும் ஒரு செயல்’ என்கிறார். நீதியையும் இரட்சிப்பையும் தரித்துக்கொள்வதுபற்றிக் கூறும் பழைய ஏற்பாட்டு வசனங்களை மனதில்கொண்டு, பவுல் அந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார். ஏசா 61:10; யோபு 29:14. ‘ஒரு வஸ்திரம்போல் விசுவாசியை கிறிஸ்துமூடுகிற ஒரு செயலாக ஞானஸ்நானத்தைக் கருதுகிறார் பவுல். ஒருவேளை அந்த அர்த்தத்தில் பவுல் பேசாவிட்டாலும், விசுவாசிகளுக்கு அருளப்படும் நீதியைத்தான் அவர் வலியுறுத்துகிறார்.’ - ஃப்ராங் ஜே.மேடரா.

கிறிஸ்துவோடு நாம் ஐக்கியமாவதின் அடையாளமே ஞானஸ்நானம். கிறிஸ்து பெற்றுக்கொண்ட யாவற்றையும் நாமும் பெற்றுக்கொண்டதை அது தெரிவிக்கிறது. கிறிஸ்துவானவர் ஆபிரகாமின் சந்ததியாக இருப்பதால், ‘கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரரான’ விசுவாசிகள், ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் வாக்களிக்கப்பட்ட உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் அனைத்திற்கும் சுதந்தரவாளிகளாக இருக்கிறார்கள். ரோமர் 8:17

---

‘கிறிஸ்து பெற்றுக்கொண்ட யாவற்றையும் நாமும் பெற்றுக்கொள்கிறோம்’ எனும் அற்புத உண்மையைத் தியானியுங்கள். நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் இந்த உண்மை எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும்?

‘நாம் தேவ புத்திரர், அவருடைய சுதந்தரவாளிகள்’ என்கிறார் பவுல். கலா 4:1-3. அதிக நில புலங்கள் உடைய எஜமான் ஒருவர் மரிக்கிறார்; அவருடைய சொத்துக்கள் அனைத்தும் மூத்த மகனுடைய பெயரில் எழுதப்பட்டுள்ளன. அவனோ சிறுவன். எனவே, அவன் வளர்ந்து பெரியவனாகும்வரை விசாரணைக் காரர் ஒருவரின் கண்காணிப்பில் இருக்கும்படி உயிலில் தகப்பன் குறிப்பிட்டிருக் கிறார். இவ்வாறு உயிலெழுதும் பழக்கம் இன்றும் உள்ளது. உயிலின்படி தகப் பனுடைய சொத்துக்கு மகன் உரிமையுள்ளவனாக இருந்தபோதிலும், சிறுவனாக இருப்பதால், நடை முறையில் ஓர் அடிமையாகவே கருதப்படுகிறான். எஜமானின் குமாரனை வளர்க்கும் பொறுப்பு அவர்களுடையது. மேலும், பணக்காரியங்களை யும் நிர்வாகக் காரியங்களையும் நிர்வகிக்கும் கடமை தனக்குண்டென அந்த மகன் உணரும்காலம் வருமட்டும், இவர்கள் அதிகாரம்பெற்றிருக்கிறார்கள்.

***இப்போது நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், நம் வாழ்க்கையில் நியாயப்பிரமாணத்தின் பங்கு பற்றி அறிவதற்கு கலா 4:1-3 எவ்வாறு உதவுகிறது?***

‘இவ்வுலகத்தின் வழிபாடுகள்’ என்று பவுல் எதைக் குறிப்பிடுகிறாரெனச் சரியாகத் தெரியவில்லை. கலா 4:3,8. **‘ஸ்டோய்க்கியா’** எனும் கிரேக்க வார்த்தைதான் ‘உலகம்’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ‘ஸ்டோய்க்கியா’ என்றால், ‘பஞ்ச பூதங்கள்’ என்று அர்த்தம். எனவே, இப்பிரபஞ்சத்தையும் அதன் மூலக்கூறுகளை யும் அவர் குறிப்பிட்டிருக்கலாம். 2 பேதுரு 3:10,12. அல்லது, இப்பொல்லாத உலகை ஆட்டிப்படைக்கும் சாத்தானின் வல்லமைகளை அவர் குறிப்பிட்டிருக் கலாம். கொலோ 2:15. ஆவிக்குரிய நியதியில் பக்குவமற்றிருந்த காலக்கட்டத்தைக் குறிப்பிட்டிருக்கலாம். எபி 5:12. கிறிஸ்து வருகிறதற்கு முன்னர் மனிதர்கள் ‘சிறு பிள்ளைகள்’ போல் இருந்ததாக அவர் கூறுவதால், (கலா 4:1-3) ஆவிக்குரிய நியதியில் பக்குவமற்றிருந்த காலத்தைத்தான் அவர் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டின் விதிமுறைகளும் பலிமுறைகளும் நற்செய்தியின் ஆரம் பக்கட்ட காரியங்களென்றும், இரட்சிப்பின் அடிப்படைக் காரியங்களை அவை எடுத்துக்காட்டினதென்றும் பவுல் வலியுறுத்துகிறார். சடங்காச்சாரப் பிரமாணங் கள் இஸ்ரவேலருக்குப் போதனையாகக் கொடுக்கப்பட்டிருந்தன; இனி வரவிருந்த காரியங்களுக்கு நிழலாயிருந்தன; கிறிஸ்துவின் ஸ்தானத்தை எடுத்துக்கொள்வது அவற்றின் நோக்கமல்ல. எனவே, கிறிஸ்துவைப் பின்பற்றாமல் விதிமுறைகளைப் பின்பற்றி வாழ நினைப்பது மீண்டும் பழைய ஏற்பாட்டு காலத்திற்கே செல்வதா கும். கிறிஸ்து வந்த பின்னரும் அடிப்படைக் காரியங்களுக்கே கலாத்தியர் மீண் டும் திரும்ப நினைத்தது, பெரியவனாகிவிட்ட குமாரன் ஒருவன் தான் மீண்டும் சிறுபிள்ளையாக நினைப்பது போலாகும்.

சிறுபிள்ளைகள் போல் விசுவாசிப்பது முக்கியம். மத் 18:3. அதற்காக, ஆவிக்குரிய வாழ் வில் சிறுபிள்ளைகளாகவே இருக்கலாமா? ஆவிக்குரிய வாழ்வில் வளரவளர நாம் சிறு பிள்ளைகள்போல் விசுவாசிக்க ஆரம்பிப்போம். உங்கள் விசுவாசம் எவ்வளவுக்கு சிறு பிள்ளைபோல் கள்ளங்கபடற்றதாகவும் உறுதியாகவும் இருக்கிறது?

## தம் குமாரனை அனுப்பினார் (கலா 4:4)

*'காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.' கலா 4:5.*

மனித வாழ்வில் தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்ற, திட்டமிட்டுச் செயல்படுகிறாரென்பதை 'நிறைவேறினபோது' எனும் வார்த்தை காட்டுகிறது. ஏதோ ஒரு காலக்கட்டத்தில் இயேசு வரவில்லை; தேவன் தீர்மானித்திருந்த காலத்தில் வந்தார். வரலாற்றின்படி, அந்தக் காலக்கட்டம் 'ரோமின் சமாதானக் காலம்' என்று அழைக்கப்படுகிறது. 200 ஆண்டுகள் ரோம சாம்ராஜ்யத்தில் நிலையான சமாதானமும் ஸ்திரத்தன்மையும் நிலவியது. மத்திய தரைக்கடல் பகுதியின் நாடுகளை ரோமர் கைப்பற்றியதால், சமாதானம் ஏற்பட்டது; எங்கும் பொதுவான மொழி பேசப்பட்டது; சுமுகமாக பிரயாணம் செய்யமுடிந்தது; பொதுவான கலாச்சாரம் நிலவியது; நற்செய்தி வேகமாகப் பரவுவதற்கு அது வசதியாக இருந்தது. வேதாகமத்தின்படி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா வருவதற்கு அந்தக் காலக்கட்டத்தைத்தான் தேவன் குறித்து வைத்திருந்தார். தானி 9:24-27.

***நம்மை மீட்பதற்கு கிறிஸ்து ஏன் மனித தன்மையைத் தரித்துக்கொள்ள வேண்டியதிருந்தது? யோவா 1:14; கலா 4:4,5; ரோமர் 8:3,4; 2 கொரி 5:21; பிலி 2:5-8; எபி 2:14-18; 4:14,15.***

கலா4:4,5 இல் நற்செய்தி இரத்தினச் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது. கலா 4:4,5. இவ்வுலகிற்கு இயேசு வந்தது ஒரு விபத்து அல்ல. 'தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். அதாவது, நம் இரட்சிப்பிற்கு முதல் அடி எடுத்துவைத்தவர் தேவன்தாம். 'கிறிஸ்து, நித்திய தேவன்' எனும் அடிப்படை கிறிஸ்தவ நம்பிக்கையும் இந்த வார்த்தைகளில் உள்ளன. யோவா 1:1-3,18; பிலி 2:5-9; கொலோ 1:15-17. பரலோக தூதுவன் ஒருவனை தேவன் அனுப்பவில்லை; தேவன்தாமே வந்தார். ஆதிமுதல் இருக்கும் தேவகுமாரனாகிய தேவன் அவர்; ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர் அவர். அவர் கன்னியிடம் பிறந்ததை இச்சொற்றொடர்கள் வலியுறுத்தினாலும், அவர் ஒரு மனிதனாகப் பிறந்ததையும் நிச்சயப்படுத்துகின்றன. 'நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்' எனும் சொற்றொடர்கள் இயேசுவின் யூதப் பாரம்பரியத்தைச் சுட்டிக்காட்டுகின்றன; அதோடு நமக்குரிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டதையும் தெரிவிக்கின்றன.

நம்மைநாமே இரட்சிக்கமுடியாது; எனவே, இயேசு நம் மனித தன்மையைத் தரித்துக்கொள்ளவேண்டியது அவசியமாயிருந்தது. அவர் தம்முடைய தெய்வ தன்மையை நம்முடைய மனித தன்மையோடு இணைத்ததால், நம் பதிலாளியாகவும் இரட்சகராகவும் பிரதான ஆசாரியனாகவும் இருக்க சட்டப்படி தகுதிபெற்றார். முதலாம் ஆதாம் தன் கீழ்ப்படியாமையால் இழந்த அனைத்தையும் மீட்டுத் தரும் இரண்டாம் ஆதாமாக அவர் வந்தார். ரோமர் 5:12-21. அவர் தம் கீழ்ப்படிதலால், நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளைப் பூரணமாக நிறைவேற்றி, ஆதாமின் தோல்வியிலிருந்து நம்மை மீட்டார். பாவி சாகவேண்டுமெனும் நியாயப்பிரமாணத்தின் நீதியை அவர் சிலுவையில் நிறைவேற்றினார். அதன்மூலம், மெய்யான விசுவாசத்தோடும் சரணடைதலோடும் தம்மிடம் வரும் யாவரையும் மீட்டுக்கொள்ளும் உரிமையைப் பெற்றார்.

## சுவீகாரத்தின் சிலாக்கியங்கள் (கலா 4:5–7)

'நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை, கிறிஸ்து மீட்டுக்கொண்டதாக' கலா 4:5-7 இல் பவுல் வலியுறுத்துகிறார். மீட்பு என்றால் 'திரும்பப்பெறுதல்'. ஒரு பிணையக் கைதி அல்லது அடிமையை மீட்டுக்கொள்ளச் செலுத்தப்படும் தொகைதான் மீட்பு. எனவே, விடுவிக்கப்படவேண்டிய நிலையில் ஒருவன் இருப்பதை மீட்பு சுட்டிக்காட்டுகிறது.

***எதிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டாக வேண்டும்?***

1. சாத்தானிடமிருந்தும் அவன் தந்திரங்களிலிருந்தும் விடுதலை. எபி 2:14,15
2. மரணத்திலிருந்து விடுதலை. 1 கொரி 15:56,57.
3. அடிமையாக்கியுள்ள பாவ வல்லமையிலிருந்து விடுதலை. ரோமர் 6:22.
4. நியாயப்பிரமாணத்தின் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலை. ரோமர் 3:19–24; கலா 3:13; 4:5.

***கிறிஸ்து தமக்குள் நம்மை மீட்டுக்கொள்வதால் நமக்குச் செய்திருக்கும் நன்மை என்ன? கலா 4: 5-7; எபே 1:6; ரோமர் 8:15,16,23; 9:4,5.***

நம் இரட்சிப்பை விளக்கமாக 'புத்திர சுவீகாரம்' (**ஹியோதிஸியா**) என்கிறார் பவுல். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களில் பவுல் மாத்திரமே இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார். ஆனாலும், கிரேக்க-ரோம உலகில் சட்ட ரீதியாக இந்த வார்த்தை பிரபலமான ஒன்று. பவுலின் காலத்தில் வாழ்ந்த ரோமப் பேரரசர்கள் பலர் சட்டப்படி தங்களுக்கு வாரிசில்லாத நிலையில், பிள்ளைகளைத் தத்தெடுத்தார்கள். அவ்வாறு தத்தெடுக்கப்படுகிறவர்கள் ஏகப்பட்ட சிலாக்கியங்களைப் பெற்றார்கள்.

1. அந்தப் பிள்ளை தத்தெடுக்கிறவனுக்கு உண்மையிலேயே புத்திரனாகிறான்.
2. அந்தப் பிள்ளையை ஒழுங்காக வளர்த்துப் பராமரிக்க அவன் சம்மதிக்கிறான்.
3. தத்தெடுக்கிறவன் தனது தத்துப்பிள்ளையைத் தள்ளிவிடவே முடியாது.
4. அந்தப் பிள்ளையை அடிமையாக்க முடியாது.
5. பிள்ளையின் உண்மைப் பெற்றோர்கூட அவன்மேல் உரிமைகோர முடியாது.
6. சொத்துரிமையைப் புத்திரசுவிகாரம் அளிக்கிறது.

புத்திரசுவிகாரத்திற்குப் பூமியிலேயே இவ்வளவு சிலாக்கியங்கள் இருக்குமானால், தேவனுடைய சுவீகாரப்புத்திரர்களாக நாம் எத்தனை பெரிய சிலாக்கியங்களைப் பெறுவோம்!

தேவன் நம் தந்தை; நாம் அவருடைய பிள்ளைகள்; அவரை 'அப்பா' என்று அழைக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். கலா 4:6. இயேசு ஜெபித்த சமயங்களில் பிதாவை 'அப்பா' என்று அழைத்தார். மாற்கு 14:36. தேவனோடு அப்படிப்பட்ட ஒரு நெருங்கிய உறவை உங்கள் வாழ்வில் நீங்கள் அனுபவிக்கிறீர்களா? 'இல்லை' என்றால், அதற்குக் காரணம் என்ன? இந்த நெருக்கத்தைப் பெற என்ன மாற்றங்கள் தேவை?

## மறுபடியும் அடிமையாவதா? (கலா 4:8–20)

**கலா 4:8-20 இல் பவுல் சொல்வதைச் சுருக்கமாக எழுதுங்கள். கலாத்தியர்மத்தியில் நிலவின கள்ளப்போதகங்களை அவர் எவ்வளவு மோசமானதாகக் கருதினார்?**

---

கலாத்தியரின் தொழுகைமுறையில் காணப்பட்ட மாறுபாடு என்னவென்று பவுல் சொல்லவில்லை. ஆனால், ஆவிக்குரிய அடிமைத்தனத்திற்குள் வழிநடத்தும் பொய்யான ஒரு தொழுகைமுறையை அவர்கள் பின்பற்றினது தெரிகிறது. அது ஆபத்தும் அழிவுமானதென அறிந்தார்; உணர்ச்சிபொங்க அவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதினார்; அவர்களுடைய செயல்கள் அவர்களை புத்திர சிலாக்கியத்திலிருந்து அடிமைகளாக மாற்றுமென்று எச்சரித்தார்.

**கலாத்தியர் என்ன தவறுசெய்தார்களென்று குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும், எந்தக் காரியம் தனக்குப் பிடிக்கவில்லையென்று பவுல் கூறுகிறார்? கலா 4:9-11.**

---

கலாத்தியர் சடங்காச்சாரப் பிரமாணங்களையும், அதோடு ஓய்வுநாளையும் கைக்கொண்டதுதான் பவுலுக்குப் பிடிக்கவில்லை; அதைதான் ‘நாட்களையும் மாதங்களையும், காலங்களையும், வருஷங்களையும்’ என்று அவர் குறிப்பிடுகிறார் என்று அநேகர் நினைக்கிறார்கள். கலா 4:10. இதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. ஓய்வு நாளையும் மற்ற யூதவழக்கங்களையும் பவுல் குறிப்பிட்டிருந்தால், கொலோ 2:16 இல் அவர் சொல்வதுபோல அதை அவர் நேரடியாகவே குறிப்பிட்டிருப்பார். மேலும், கிறிஸ்துவுக்குள் அவர்களுக்குக் கிடைத்த விடுதலையிலிருந்து அவர்களை மீண்டும் அடிமைத்தனத்திற்குள் வழிநடத்தின காரியங்களை கலாத்தியர் செய்ததாக பவுல் குறிப்பிடுகிறார்.

‘ஏழாம்நாள்ஓய்வுநாளை ஆசரிப்பது ஒருவனை அடிமைத்தனத்திற்குள் வழிநடத்துமானால், உலகின் முதல் ஓய்வுநாளை ஆசரித்த சிருஷ்டிகர்தாமே அடிமைத்தனத்திற்குள் சென்றார் என்று சொல்லலாமே’’ – *6 SDABC, p 967.*

**ஓய்வுநாளை ஒழுங்காக ஆசரிப்பது, கிறிஸ்துவுக்குள் கிடைத்த விடுதலையை மனிதரிடமிருந்து பறிக்குமானால், கிறிஸ்துதாமே ஓய்வுநாளை ஆசரித்திருப்பாரா? அல்லது, ஓய்வுநாளை ஆசரிக்கும்படி பிறருக்குப் போதித்திருப்பாரா? மாற்கு 2:27,28; லூக்கா 13:10-16.**

---

கிறிஸ்துவுக்குள் நமக்குள்ள விடுதலையை எடுத்துப்போடும் விதத்தில் ஏதாவது ஒரு வழக்கம் செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் சபையில் காணப்படுகிறதா? அப்படிப் பட்ட பழக்கம் தன்னில்தானே தவறானதாக இல்லாவிட்டாலும், நம் நடவடிக்கையால் அதைத் தவறானதாக ஆக்கிவிடுகிறோமா? கலாத்தியரை பவுல் எச்சரிப்பதுபோன்ற ஓர் அடிமைத்தனத்திற்குள் நம் தவறான மனப்பான்மை எவ்வாறு வழிநடத்தக்கூடும்?

"அக்கிரமக்காரராகிய மனிதர் தங்கள் கீழ்ப்படியாமையினால் அழிந்து போகக் கூடாது. இயேசுவை அவர்கள் தங்கள் பிணையாளியாகவும் பதிலாளியாகவும் விசுவாசிப்பதன் மூலம் இயேசுவுக்குள் முன்குறிக்கப்பட்ட சுவீகாரப் பிள்ளைகளாகத் தெரிந்துகொள்ளப்பட, தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி பரலோகச் சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மனிதர் அனைவரும் இரட்சிக்கப்படுவதே தேவசித்தம்; மீட்கும்பொருளாகத் தம் ஒரேபேறான குமாரனைக் கொடுத்து, அதற்கு வழிசெய்துள்ளார். இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய புத்திரராகச் சுவீகரிக்கப்பட விரும்பாததால்தான் பலர் அழிந்துபோவார்கள். இரட்சிப்பிற்கான முன்னேற்பாடுகளை ஏற்றுக் கொள்ளாதபடி மனிதரின் அகந்தைதான் அவர்களைத் தடுக்கிறது. ஆனால், மனிதனுடைய புண்ணியம் எதுவும் எந்த மனிதனையும் தேவபிரசன்னத்திற்குள் கொண்டு செல்லமுடியாது. கிறிஸ்துவின் நாமத்தை விசுவாசிப்பதால் அருளப்படும் கிருபையால் மட்டுமே ஒருவன் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறவனாக மாறுகிறான். கிரியைகளை வைத்தோ, சந்தோஷ உணர்வுகளை ஆதாரமாகக் காட்டியோ, தேவன் தெரிந்து கொண்ட மனிதர் இன்னாரென்றுசொல்லமுடியாது; கிறிஸ்துவின் மூலமாகத்தான் மனிதர் தெரிந்துகொள்ளப்படுகிறார்கள்." – *ST, Jan 2, 1893.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. தேவன்மேல் விசுவாசம்வைப்பதிலும், அவரோடு உறவுகொள்வதிலும் அவருடைய பிள்ளைகளாக நாம் எப்படிப்பட்ட தன்மைகளை வெளிப்படுத்த வேண்டும்? அதேநேரம், ஆண்டவருடைய பிள்ளைகளென்று சொல்லிக் கொண்டு, அளவுக்கு மிஞ்சியும் நாம் சென்றுவிட எவ்வாறெல்லாம் வாய்ப் பிருக்கிறது?
2. 'விசுவாசத்தால்மாத்திரமே இரட்சிப்பும் கிருபையும் உண்டு' போன்ற கருத்துகளை ஏற்றுக் கொள்ள மனிதர் தயங்குவது ஏன்? 'கிரியையினால் இரட்சிப்பு' உண்டென்றால், அநேகர் அதைத்தான் விரும்பியிருப்பார்கள். அது ஏன்?
3. வியாழக்கிழமைப் பாடத்தின் கடைசிக் கேள்வியை மீண்டும் கலந்தாலோசியுங்கள். எந்த அடிமைத்தனத்திலிருந்து நாம் விடுதலைபெற்றிருக்கிறோமோ அதற்குள் மீண்டும் விழுந்து விட என்ன வழிகளிலெல்லாம் வாய்ப்பிருக்கிறது? அதிலிருந்து எவ்வாறு தப்பலாம்?

**பாடச்சுருக்கம்:** தேவனுடைய குடும்பத்தின் குமாரரும் குமாரத்திகளுமாக கிறிஸ்துவுக்குள் நாம் தத்தெடுக்கப்பட்டிருக்கிறோம். பிள்ளைகளுக்குரிய அனைத்து உரிமைகளையும் சிலாக்கியங்களையும் தேவபிள்ளைகளாக நாம் பெற்றிருக்கிறோம். சட்டதிட்டங்களையும் விதிமுறைகளையும்மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு, நாம் தேவபிள்ளைகளென்று நினைக்கக்கூடாது. அது எப்படியிருக்குமென்றால், ஒரு குமாரன் தான் அடிமையாவதற்காக, தன் அந்தஸ்தையும் சுதந்தரத்தையும் உதறுவதுபோல இருக்கும்.

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)
## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.